1981 ஏப்ரல் 15] [பேரவைத் தலைவர்]

மாக வேண்டுமானால் சொல்லுங்கள் என்று அனுமதி அளித்தேன். அவரும் தன்னிலை விளக்கமாக தன்னுடைய கருத்தை சொல்லி இருக்கிறார். அது அவருக்குள்ள உரிமை ஆகும். அதோடு இந்தப் பிரச்சினை முற்றுப்பெற்று விட்டது. ஒருவர் தன்னிலை விளக்கம் சொல்லி, அதற்கு மற்றொருவர் தன்னிலை விளக்கம் என்ற பெயரால் பதில் சொல்லி பின்னர் அடுத்தவர் சொல்வது எல்லாம் முடியாத காரியம்.

திருமதி டி. யசோதா: தலைவர் அவர்களே, நான் முதலிலே இந்த மன்றத்திலே இந்தப் பிரச்சினையைக் குறித்து எழுப்பியபோது அந்த சட்டமன்ற உறுப்பினர் பெயரைச் சொல்லக்கூடாது என்று நீங்கள் பாதுகாப்புத் தந்தீர்கள். ஆனால் இன்று அவர் என்னுடைய பெயரைப் பல இடங்களில் பயன் படுத்தி இருக்கிறார். (கூச்சல், குழப்பம்).

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, திருமதி யசோதா அவர்களுக்கும் தன்னிலை விளக்கம் சொல்ல அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னைப் பற்றி ஒரு தவறான தகவல் இந்த அவைக்குத் தரப்பட்டு இருப்பதன் காரணமாக, அந்தத் தவறை விளக்க வேண்டிய அவசியத்திற்குதன்னிலை விளக்கம் தரவேண்டிய நிலைமை மாண்புமிகு உறுப்பினர் உக்கம்சந்த் அவர்களுக்கு ஏற்பட்டது. அதே மாதிரி ஒரு தவறான தகவல் தன்னைப் பற்றி கூறி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் கருதுவார்களானால் தன்னிலை விளக்கம் எழுதி, தங்களிடம் அனுமதி பெற்று, அனுமதிக்கப்படுவார்களானால், அதற்குப் பிறகு சொல்லலாமே தவிர, இப்போது இந்தப் பிரச்சினையைச் சொல்வது சரியல்ல.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) பெரியார் மாவட்டம், பூச்சநாயக்கன்பாளையத்தில் தீ விபத்து.

திரு. கு. அ. செங்கோட்டையன்: பேரவைத் தலைவர் அவர்களே, "பெரியார் மாவட்டம் கோபிச் செட்டிப்பாளையம் வட்டத்தில் உள்ள பூச்சநாயக்கன்பாளையத்தில் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாள் அன்று ஏற்பட்ட தீ விபத்தினால் ஆதி திராவிட மக்களுக்குச் சொந்தமான 17 வீடுகள் சேத

[திரு. கு. அ. செங்கோட்டையன்] [1981 ஏப்ரல் 15

மடைந்தது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தீயினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாக 200 ரூபாய் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு வேட்டி, சேலை கொடுக்கப்பட்டது. அரிசி 5 கிலோ கொடுக்கப் பட்டது. அவர்கள் வீடுகட்டுவதற்கு ஒரு குடும்பத்திற்கு 2,000 ரூபாய் கொடுக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக் கிறோம்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்டவர்களுக்கு 200 ரூபாயும் சேலை, வேட்டியும், அரிசியும் கொடுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த 2,000 ரூபாயையும் உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு 'தாட்கோ' மூலமாக வீடு கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, 2,000 ரூபாயை மிக விரைவில் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யும். தாமதமானால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை உடனே எடுக்கப்படும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆ. கேலவரப்பள்ளி அணையைக் கட்டும் பணி நிறுத்தப் பட்டுள்ளது.

Thiru T. VENKATA REDDY : Mr. Deputy Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Irrigation, to a matter of urgent public importance, (i.e.) "Anxiety prevailing among agriculturists due to the suspension of the construction of Kelavarapalli Dam in Hosur Taluk, Dharmapuri District".

* மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS